ஸ்ரீ திரிபுரஸுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீச்வராயநம:

# ஆர்யதர்மம்.

कुतोऽवीचिर्वीचिस्तव यदि गता लोचनपथं
त्वमापीता पीतांबरपुरनिवासं वितरसि ।
त्वदुत्सङ्गे गङ्गे पतति यदि कायस्तनुभृतां
तदा मातश्शातक्रतवपदलाभोऽप्यतिलघुः ॥ गङ्गाष्टकम् ।

𑌕𑍁𑌤𑍋𑌽𑌵𑍀𑌚𑌿𑌰𑍍𑌵𑍀𑌚𑌿𑌸𑍍𑌤𑌵 𑌯𑌦𑌿 𑌗𑌤𑌾 𑌲𑍋𑌚𑌨𑌪𑌥𑌂
𑌤𑍍𑌵𑌮𑌾𑌪𑍀𑌤𑌾 𑌪𑍀𑌤𑌾𑌂𑌬𑌰𑌪𑍁𑌰𑌨𑌿𑌵𑌾𑌸𑌂 𑌵𑌿𑌤𑌰𑌸𑌿 ।
𑌤𑍍𑌵𑌦𑍁𑌤𑍍𑌸𑌙𑍍𑌗𑍇 𑌗𑌙𑍍𑌗𑍇 𑌪𑌤𑌤𑌿 𑌯𑌦𑌿 𑌕𑌾𑌯𑌸𑍍𑌤𑌨𑍁𑌭𑍃𑌤𑌾𑌂
𑌤𑌦𑌾 𑌮𑌾𑌤𑌶𑍍𑌶𑌾𑌤𑌕𑍍𑌰𑌤𑌵𑌪𑌦𑌲𑌾𑌭𑍋𑌽𑌪𑍍𑌯𑌤𑌿𑌲𑌘𑍁𑌃 ॥

ஹேகங்கே பூஜ்யையான கங்காதேவியே உன்னுடைய அலையானது லோசனத்துக்குத் தென்பட்டால் அந்த மனிதனுக்கு அவீசி என்கிற நரகம் எப்படி ஏற்படும்? ஒருகாலும் ஏற்படாது. உன்னுடைய மிகவும் பாவனமான புண்யதீர்த்தத்தை அருந்தினவர்களுக்குப் பீதாம்பரதாரியான ஸ்ரீமஹாவிஷ்ணுவினுடைய லோகவாஸத்தை அதாவது வைகுண்டவாஸத்தைக் கொடுக்கிறாய். பிராணிகளுடைய சரீரமானது உன்னுடைய ஸமீபத்திலிருந்து மரணத்தையடைந்தால், ஹே அன்னையே அவர்களுக்கு இந்திரனால் அரசாளப்பட்ட ஸ்வர்க்கத்தின்பிராப்தியானது வெகுசுலபமாய்நேருகின்றது.

உலகிலுள்ள நதிகளுக்குள் மிகச்சிறந்தது கங்காநதிதான் என்பதை யாரும் மறுப்பதற்கில்லை அந்நதி இருக்குமிடங்களெல்லாம் புண்யபூமியேயாகும். அதற்குள் ஸ்ரீ காசி க்ஷேத்ரம் மிகவும் புண்யபூமியாகும் என்பதை

गङ्गातीरमनुत्तमं हि सकलं तत्रापि काश्युत्तमा ।
𑌗𑌙𑍍𑌗𑌾𑌤𑍀𑌰𑌮𑌨𑍁𑌤𑍍𑌤𑌮𑌂 𑌹𑌿 𑌸𑌕𑌲𑌂 𑌤𑌤𑍍𑌰𑌾𑌪𑌿 𑌕𑌾𑌶𑍍𑌯𑍁𑌤𑍍𑌤𑌮𑌾 ।

இதினால் ஒருபெரியாரும் அறிவித்திருக்கிறார். ஆகையால் கங்கையைத் தர்சித்தாலும் அதில் ஸ்நானம் செய்தாலும் அதினால் விளங்கும் காசிக்ஷேத்திரத்தில் மரித்தாலும் மிகவும் உத்தமமான பதத்தைப்பெறலாம்.

உபபத்திராதிபர்.

# ஆர்ய தர்மம்.

பிரபவ௵ ஆவணி-மீ கூவை


## கலிகால தர்மோபதேஷ்டாக்கள்.

(452-வது பக்கத்தொடர்ச்சி)

இவ்விதம் ஈசுவராதிகளால்கூடச் செய்யவியலாத கீழ்ஜாதியிலிருப்பவர்களை மேல்ஜாதியில் தூக்கிவிடுகிறோமென்று தோன்றியபடியெல்லாம் தாறுமாறாகச் சில தீயச்செயல்களையும் செய்து அவர்களைக்கெடுக்க முன்வருவது எவ்வளவு ஸாஹஸமான கார்யம் பகவானுடைய ஆணையைமீறி இவர்களால் ஒருவனை மேல்ஜாதியிலிருப்பவனைப்போல் வேஷம்போட்டு அவன்செய்யும் வேதாத்யயநம் முதலானகார்யங்களை இவனையும் செய்யும்படி செய்தாலும் அதினால் யாதுபயன் கிட்டும்? பயனில்லாமலிருப்பதுமன்றி கொடியபாபமும் ஸம்பவிக்கும். இந்த அபிப்பிராயத்தையே:—

स्वधर्मे निधनं श्रेय: परधर्मो भयावह: ।

𑌸𑍍𑌵𑌧𑌰𑍍𑌮𑍇 𑌨𑌿𑌧𑌨𑌂 𑌶𑍍𑌰𑍇𑌯𑌃 𑌪𑌰𑌧𑌰𑍍𑌮𑍋 𑌭𑌯𑌾𑌵𑌹𑌃 ।

தனக்கு விதிக்கப்பட்ட தர்மத்தை அனுஷ்டிக்கமுயன்று சரியாய் அனுஷ்டிக்கமுடியாமல் குறை நேர்ந்தாலும் அதினால் சிரேயஸ் தான் உண்டாகும். இதரஜாதியின் தர்மத்தை நன்றாய் அனுஷ்டித்தாலும் அது பயத்தையே கொடுக்கும் என்று கீதையில் பகவான் சொல்லியிருக்கிறார். பகவான் கூறியதுகூட சரியல்லவென்று இவர்கள் மாற்றமுயன்றால் அதினால் அதிககஷ்டம் நேருமேயல்லாமல் பயனை எதிர்பார்க்க எப்படி முடியும். இவர்களுக்குச்சக்தியிருப்பின் குதிரையை யானையாகச் செய்யலாமே அவ்விதம் அவர்கள் செய்ததாகத் தெரியவில்லை. ஆனால் குதிரைக்கு யானை என்று பெயரிட்டழைக்கலாம் அதுபோல் ஈழுவர்களையும் தீண்டாதவர்களையும் பிராமணர் என்றோ க்ஷத்திரியர் என்றோ பெயர் இட்டழைக்கலாமேயன்றி வேறு என்ன கார்யம் இவர்களால் செய்யமுடியும். சீர்திருத்தக்காரர்கள் என்றும் உலகக்ஷேமத்திற்

காக பாடுபடுகிறோமென்றும் சொல்லிக்கொண்டு இவர்களாலாரம்பிக்கப்படும்மதஸம்பந்தமானகார்யங்கள்பூராவும்சாஸ்திரங்களுக்கு விரோதமாயும் அதிக கஷ்டங்களைக்கொடுக்கக்கூடியவைகளாகவுமிருக்கின்றனவேயன்றி அற்பங்கூட ஸௌக்யமேற்படும் என்று கூறுவதற்கிடமேயில்லை இவ்விதம் பயனற்ற வீண்வேலைசெய்ய ஏன் அவர்கள் முன்வருகிறார்களோ தெரியவில்லை' ஸகலலோகங்களுக்கும் க்ஷேமத்தைச் செய்யவேண்டுமென்று கங்கணம் பூண்டிருக்கும் ஸ்ரீ பகவான் கருணைகொண்டு இவர்களுடைய மனதிற் புதந்து நல்வழியில் திரும்பவேண்டுமேயன்றி நம்போன்றவர்களால்ஸாத்தியமாகத்தோன்றவில்லை. பொதுவாய் ஜனங்களுடைய க்ஷேமத்திற்கு முக்கிய ஸாதனமான ஸநாதனதர்மம் நன்கு நடைபெறவேண்டுமென்கிற விருப்பம் அதிகமாக நமக்கிருப்பதால் அதற்கு இடையூர்செய்ய முன்வந்திருக்கும் சிலருடைய புத்தியை மாற்றி தர்மநெறிகளிலிருந்தும் மாறாமலிருக்கும்படி அனுக்ரஹிக்கவேண்டுமென்று கருணைக்கடலான கண்ணபிரானை நாமும் பன்முறை பிரார்த்தித்து இவ்விஷபத்தையும் இத்துடன் பூர்த்தி செய்துகொள்ளுகிறோம். சுபம்.

உபபத்திராதிபர்.

---

# தீண்டாமைக்கு முடிவு காலம்.

(458-வது பக்கத்தொடர்ச்சி)

அடுத்தது ஸமுத்திரயாத்திரை. இதைப்பற்றியும் இங்கு விசேஷமாய்க் கூறவேண்டாம். ஏனெனில் இதற்கென்று தனித்தனியே பலர் பலவிதக்கிரந்தங்கள் வெளியிட்டிருக்கின்றனர். இங்கு இந்த நிஷேதத்தால் முன்யுகத்தில் பிராமணனும் ஸமுத்திரயாத்திரை செய்திருப்பதாய் வெளியாகிறது. இருக்கட்டுமே. அதனாலென்ன. அது இக்கலிக்கு வேண்டாமென்று கூறிவிட்டதால் இதுவே நமக்குப் போதாதோ இதை விட்டுவிட்டு ஸமுத்திரயாத்திரை போகக் கூடாதென்பதற்குப் பிரமாணமிருக்கிறதாவென்று கேட்பவர் சிலர் போகக் கூடாதென்றால் என் போகக் கூடாதென்று தடுத்தார்கள் என்கிறார். ஸந்தியாவந்தனாதிகள்

போய்விடும் என்று நவீன பண்டிதன் பதில் கூறுகிறான். இங்கே யே ஸந்தியாவந்தனத்தை விட்டிருக்கிறானே அப்படியானால் அவன் கதி என்ன? நான் ஸந்தியாவந்தனத்தை இங்கும் விட வில்லை. அங்கு போகும்போது கப்பலில் செய்துகொண்டே போவேன். சீமையிலும் விடமாட்டேனென்கிறது. அதற்குமேல் அந்த ஜலம் அசுத்தம் என்று பண்டிதன் சொல்கிறது. அனேக டாக்டர்களெல்லாம் பரிசோதனை செய்திருக்கிறார்கள். அந்த ஜலம் மிகவும் சுத்தமானது. நம் தேசத்தில் இருக்கும் நதி ஜல மோ குட்டை கிணற்று ஜலமோ இதுதான் சுத்தமில்லையென்கி றது. இவ்விதம் மேன்மேற்போய்ப் பண்டிதன் வாயை அடைத் துவிட்டு இவ்வளவுதானே சாஸ்திரம் போமய்யா நான் போய் வருகிறேனென்று சில ஆஸ்திகர்கள் கூறுகிறது. எதற்கையா இவ்வளவு தூரம் வாக்குவாதம் வேண்டாமே லௌகிகன் சாஸ் திர நிஷேதமிருக்கிறதாவென்று கேட்டால் ஆம் இருக்கிறது என்று வசனத்தைச் சொல்லட்டும் அதற்குமேல் இது எதற்காகச் சொன்னார் என்று கேட்டால் போகக்கூடாதென்பதற்காகத்தான் கூறினர் என்கிறோம். என்ன காரணம் போகக்கூடாதென்பது. தான் காரணம். முக்கிய காரணம் வேண்டுமென்றால் சாஸ்திரத் திற்பற்றுள்ளவனானால் மகரிஷியையே பிரத்யக்ஷம் செய்துகேட் டுக்கொள். எனக்கு மகரிஷி வசனம் எல்லாம் நம் ஹிதத்திற்கே ஏற்பட்டிருக்கிறதென்றும் அதில் காரணம் விசாரிப்பது அவசிய மே இல்லையென்றும் அவ்வாறு விசாரிக்கப்புகின் நம் ஆசாரம் அனுஷ்டானம் யாதொன்றையுமே அனுஷ்டியாது தலைக்கநேரிடு மென்பது நிச்சயமென்றும் கொள்கை. ஆஸ்திகனல்லாவிடில் இதொன்றையும் விசாரியாமல் விசாரமற்றுப் போவென்போம். வீண்வாதம் அப்போது நிகழாது. பிரகிருதமில்லாத இதைவிட்டு வழியில் செல்வோம். முற்காலத்தில் ஸமுத்திரயாத்திரை இருந் தால் இருக்கட்டும். அது நமக்கு வேண்டாமென்று கலியில் தடு த்துவிட்டனர். பாருங்கள் இவ்விதம் தடையால் நமக்கு நலமா கெடுதலாவென்பதை கவனியுங்கள். நலமென்றே முடியும். எனெ னில் ஆதியில் இவ்விதம் தடுக்காமல் இருந்தால் இவ்வளவு காலத் துக்குள் சீமையையும் இந்தியாவையும் ஒன்றுசெய்து வர்ணாசிரம தர்மம் என்ற தடம் இல்லாமற் கூடச் செய்திருப்போம். இப் போது நம்மவர்கள் தாராளமாய்ப் போகத்தலைப்பட்டனர். நம்

வர்ணாசிரமதர்மமும் காடேகத் தலைப்பட்டு விட்டது. இன்னும் கொஞ்சகாலத்திற்குள் நாம் எல்லோரும் சகோதரர்களாய் விடுவோம். சில ஸ்மிருதியில் பிராமணன் முன் யுகத்தில் ஸமுத்திர யாத்திரை விசேஷமாய்ப் போகிறதில்லையென்றும் ஏதோ கார்ய வசத்தால் போகநேரிடின் போய்த் திரும்புவதும் அவனுக்குப் பிராயச்சித்தம் செய்து சேர்த்துக் கொள்வதும் வியவஸ்தையாயிருந்ததை

द्विजस्याब्धौ तु नौयातुश्शोधितस्यापि संग्रहः ।

த்விஜஸ்யாப்தௌ து நௌயாதுஶ்ஶோதிதஸ்யாபி ஸங்க்ரஹ: ।

என்று கலி நிஷேதவசனம் கூறுகிறது. அவ்விதம் இக்காலத்தில் போனால் பிராயச்சித்தம் செய்தும் சேர்க்கக் கூடாது என்றே தடுத்து விட்டார். இனி அடுத்தது. மஹாப்பிரஸ்தானம் என்பது இதில் இறங்குவாம்.

முன் யுகங்களில் வெறுப்பாலோ அல்லது ஓர்பாபப்பிராயச்சித்தமாகவோ தீர்க்கபாத்திரை ஆரம்பித்து விடுகிறது. அவ்விதம் ஆகாரமில்லாமல் நடந்து விழுந்து மரித்து விடுகிறது என்ற நியமம். அவ்விதம் மஹாப்பிரஸ்தானம் கூடாதென்கிறார்.

அடுத்தது கோவைப்பசுவாய் உபயோகித்தல் இது விளக்கப்பட்டது. ஸுராபானம் செய்வதென்பது அதற்கடுத்தது. இது முன்யுகங்களில் ஸுரா என்ற ஆஸவம் அதாவது புஷ்பஸாரம் சில யாகங்களிலும் மற்றும் சிலவிடங்களிலும் அருந்தப்பட்டு வந்தது அதுவும் இக்கலிக்கு வேண்டாமென்கிறார். அக்னிஹோத்திர பாத்திரத்தில் ரித்விக்குகள் சேர்ந்து நக்கி நக்கி சாப்பிடுவது ஓர் நியமம் அது இப்போது கூடாதென்றார்.

தன் ஜாதியிற் ஜனிக்காத கன்னியை மணத்தலென்பது இதற்கடுத்தது. இது முன் யுகங்களில் சாதாரணமாய் நடந்து வந்தது. அதாவது பிராமணன் பிராமண ஸ்திரீயையும் க்ஷத்திரிய ஸ்திரீயையும் வைசிய ஸ்திரீயையும் சூத்திர ஸ்திரீயையும் விவாகம் செய்துகொள்வான். அவ்விதம் க்ஷத்திரியன் தன் ஜாதியிலும் அதற்குக் கீழ் ஜாதியிலும் வைசியன் இரண்டு ஸ்திரீகளையும் சூத்திரன் ஒருஸ்திரீயையும் விவாஹம் செய்வான். இக்கலியில் அது சாஸ்திரீயமாகக் கொள்ளத்தக்கதல்லவென்று தடுத்துத் தன் ஜாதியிலேயே விவாகம் செய்யவேண்டுமென்று வரம் பறுத்தார்,

ஆசாரம் அத்தியயனம் இதன் நிமித்தம் தீட்டைச் சுருக்குதல் என்பது இதற்கடுத்தது. அதாவது முன் யுகத்தில் ஸதாசார நிஷ்டன். குருகுலவாஸம் செய்பவன் இவர்களுக்கு ஞாதிகள் விஷயமான ஆசௌசங்கள் வேண்டாமென்று தடுத்திருந்தனர். இக்கலியில் அவ்வித ஆசாரமும் குருகுலவாஸமும் இல்லாததால் அவ்விதத் தடங்கல் கூடாதென்றெடுத்து விட்டனர். இதனால் பிர்மசாரியும் தீண்டலை அனுஷ்டிக்க வேண்டியதுதான். ஆனால் நம் இத்தமிழ் நாட்டில் தமிழ்பேசும் பிராம்மணர்கள் மட்டிலும் பிர்மசாரிக்குஆசௌசம் அனுஷ்டிக்காமலே இருந்துவருகின்றனர். மற்ற ஆந்திர கர்னாடகப் பிராம்மணாள் பிர்மசாரிகளையும் தீண்டல் அனுஷ்டிக்கும்படி செய்கின்றனர்.

இனி ஸஞ்சயனம் செய்தபிறகு ஒருவருக்கொருவர் தொட்டுக்கொள்ளல் என்பது முற்காலத்தில் பிராமணர்கள் 4வதுநாளில் ஸஞ்சயனம் செய்வார்கள். அதன்பிறகு அங்கத்தை ஸ்பரிசித்தல் தோஷமில்லை என்றிருந்தது. இக்கலியில் அதை நீக்கி 10நாள் வரைத் தீண்டல் அனுஷ்டித்தே தீரவேண்டுமென்று வைத்தனர்.

பிராமணர்களுக்கு மரணாந்த தண்டனை விதிக்கவேண்டாமென்பது அடுத்த விஷயம். முற்காலத்தில் பிராமணன் குற்றம் செய்தால் மரணாந்த தண்டனை ஏற்பட்டிருந்தது. இக்காலத்தில் அது வேண்டாமென்று தடுத்தனர். இது அரசர் நம்மதத்தவரல்லாததால் அனுஷ்டானத்திற்கு ஒத்து வரவில்லை தவிர

सुरां पीत्वा द्विजो मोहादग्निवर्णां सुरां पिबेत् ।
तया सकाये निर्दग्धे मुच्यते किल्बिषात्ततः ॥

ஸுராம் பீத்வா த்விஜோமோஹாதக்நிவர்ணாம் ஸுராம் பிபேத்। தயா ஸகாயே நிர்தக்தே முச்யதே கில்பிஷாத்தத:॥

பிராமணன் அறியாத்தன்மையால் கட்குடித்துப்பிறகு பிராயச்சித்தத்தை விரும்புவானாயின் அவனுக்குக் கள்ளை நெருப்புப் பறக்கக் காயவைத்துக் குடிக்கச்சொல்லவேண்டும். அதனால் அவன்சரீரம் எரிந்துபோம். பிறகு அவன் சுத்தி பெறுவானென்கிறமாதிரியான பிராயச்சித்தம் இக்கலியில் வேண்டாமென்று தள்ளினர்.

அடுத்து பாபிகளுடன் கூடினவனும் பாபியாவான் என்று முன் யுகங்களின் துணிபு. இதைப்பற்றி முன்னமேயே ஆரம்பத்

தில் விரித்துரைத்திருக்கிறேன். ஆகவே மகாபாபிகளோடு சேர்ந்ததால் பாதகதோஷம் இக்கலியில் கிடையாதென்றார்.

மதுபர்க்கத்தில் பசுவதம் செய்தல். இதுவும் விவரிக்கப் பெற்றுவிட்டது. ஸ்வீகாரமாய் வந்தவன் சொந்தப்பிள்ளை இவ்விருவரைத் தவிர மற்றவர்களைப் புத்திரனாய்க் கொள்ளல் கூடாதென்று கலியில் தடுத்தார். இப்போது வழக்கத்தில் நமது சொந்தப்புத்திரனையும் ஸ்வீகாரமாய்ப் பெற்றவனையும புத்திரனாய் வியவகரித்துக்கொள்கிறோம். முன்யுகங்களில் இன்னும் 8 பெயர்களைப் புத்திரனாய்க் கூறுகின்றனர். அவர்கள் இங்கு விஸ்தரிக்க வேண்டியவர்களல்லவென்று விடுகிறோம்.

பிராம்மணர்களே யக்ஞத்தில் முன்காலத்தில் பசுவதை செய்தனர். அது இக்காலத்திற்கேற்காது. ஸோமம் என்ற யாகத்திற்கு முக்கிய ஸம்பந்தமுள்ள கொடியை பிராமணனைக்கொண்டு வரச்சொல்லி அதன் கிரயத்தைக் கொடுத்துப் பெற்றுக்கொள்ளுதலென்பது முக்காலத்திய தர்மம். இப்போது அது கூடாதென்றார். முற்காலங்களில் நைஷ்டிகப் பிர்மசாரி என்று சாவளவும் பிர்மசர்யாச்ரமத்திலேயே இருந்து விடுவதுண்டு. அது இக்காலத்திற்குக்கூடாதென்கிறார்.

நரமேதம் அசுவமேதம் கூடாது ஆக இத்தகைய தர்மங்கள் கலியின் ஆதியில் பலமகான் சபைகூடி வேண்டாமென்று தடுத்துவிட்டதாய் தர்மசாஸ்திரங்களின்மூலம் வெளியாகிறது. இவ்விதம் தடுத்தது லோகஹிதத்தைத் தீர்க்கமாய் ஆலோசித்துச்செய்தது என்பதையும் இதன்படி நடந்துவந்தால் இக்கலியில் சீக்கிரம் சித்திபெற்றுவிடலாமென்பதையும் ஆஸ்திகர் யாவருமறியலாம். இதுவும் சரியல்லவென்று இன்னும் சிலமாறுதல் செய்யவேண்டுமென்றால் இதை மாற்றவிரும்புகிறவர் இதன்தத்வத்தை முழுமையும் படித்து அறிந்தவராய் இருக்கவேண்டுமென்றும் இதனால் இன்னின்ன அதர்மங்கள் நேருமென்று நிரூபிக்கக்கூடியவராய் இருக்கவேண்டுமென்றும் இத்தகைய சக்திவாய்ந்தவர் பலர்கூடி யோசித்து மாற்றவேண்டுமேயொழிய இதன்வழி தெரியாதவர்கள் முயல்வது அழகுமல்ல. கார்யஸித்தியுமாகாதென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இனி தர்மசாஸ்திர சுதாநிதி என்ற கிரந்தகாரரும் விளக்கியிருக்கிறார், ஆனால் முற்கூறிய விஷயங்களை

அதில் இருந்தபோதிலும் இரண்டொன்று அதிகமாய் இருப்பதை மட்டும் கவனிப்பாம். மாதாவின் கோத்திரத்திலும் தன் கோத்திரத்திலும் விவாகம் செய்யலாகாதென்கிறார். இப்போது ஸகோத்திரத்தில் விவாகம் அவ்வளவு பிரஸித்தமாய் நடவாவிடினும் மாதிருகோத்திரமான மாமன்பெண்ணை மணம்புரிவது ஸஹஜமாயிருக்கிறது. இது இன்று நேற்று ஏற்பட்டதல்ல. போதாயனர்காலத்தில் அவரது அனுமானத்திற்கும் எட்டாதகாலம்தொட்டு நடந்தேறிவருவதாய் அவரே தென்தேசத்தில் ஐந்து அசாஸ்திரீய கார்யங்கள் நடக்கின்றனவென்றவிடத்தில் மாமன் பெண்ணை மணத்தல் என்று கணககிட்டார். இதனால இது சாஸ்திரீயமென்றாய்விடாது. வெகுகாலமாய் நடக்கும் அதிக்ரமம். ஆனால் இதை அன்யதேசத்தான் அதாவது தென்னாட்டைத்தவிர மற்றவர்கள் நடத்தக்கூடாதென்று கூறினர். ஆதலபற்றியே மற்றதேசங்களில் இது அசாஸ்திரீயமென்று தள்ளப்பட்டே இருக்கிறது.

ஸத்ரம் என்று ஓர் யாகம் உண்டு. அதில் எல்லோரும் யஜமானர்கள் அவ்விதயாகம் ஒன்று நடந்துவந்தது. அத்தகைய யாகத்தில் எல்லோரும் யஜமானர்களாய் தீக்ஷை பெறுவது கூடாதென்கிறார். இந்நிஷேதத்தால் நமக்குக்கிடைக்கும் லாபம் ஒன்றுண்டு. யாகமே கலியில் கூடாதென்று முதலில் நமக்கு ஏற்பட்டது. அவ்விதம் நிஷேதம் நிலைபெறுதென்பதை இதுவும் காண்பிக்கிறது. கலியில் எல்லா யாகமும் உண்டு. ஸத்ரயாகமும் உண்டு. ஆனால் முன்யுகங்களிற்போல் எல்லோரும் தீக்ஷை உள்ளவர்களாய் ஆகக்கூடாது என்று அதைமட்டும்தான் தடுத்தது. மற்றும் நரமேதம் வேண்டாம் அசுவமேதம் வேண்டாம். யக்ஞத்தில் பசுமேதமும் வேண்டாமென்றெல்லாம் சொல்வதிலிருந்து மற்றைய யாகங்கள் செய்யவேண்டியது அவசியமென்றே வற்புறுத்துகிறது.

(தொடரும்)

*M. N.* சுப்பிரமணிய சாஸ்திரி.

# தமிழ்ப் பஞ்சாங்க ஆராய்ச்சி.

(464-வது பக்கத்தொடர்ச்சி)

நிரயனப்படி ஒருவருஷம் 365-நாள் 15-நாழிகை 31¼-விநாடியாகிறது. இவ்விரண்டு கணக்குகளுக்கும் வருஷமொன்றுக்குச் சுமார் ஒரு நாழிகை வித்தியாசமிருக்கிறது. அசுவதியில் சூரியன் நுழையும் சமயத்தை வருஷப்பிறப்பாகவேற்படுத்திச் சுமார் 1500 வருஷங்கள் ஆயிருக்கிறதென்று கணிதசாஸ்திர விசாரணையிலிருந்து ஏற்படுகிறது. மேஷத்தை அசுவதி முதலாக எண்ணவேண்டுமென்றும் அசுவதிக்குள் சூரியன் பிரவேசம்செய்யும் காலத்தை வருஷப்பிறப்பாகக் கொள்ளவேண்டுமென்றும், கி. பி. ஐந்தாவது நூற்றாண்டில் வராஹமிஹிரரென்பவர் ஏற்படுத்தினாரென்றும், அச்சமயம் விஷுவ புண்ணியகாலத் தேதிகளிலும்,அயன புண்யகாலத்தேதிகளிலும், அசல்கணக்குகள் அப்புண்யகாலங்களுக்கேற்பவிருந்தனவென்றும், காலஞ்சென்றலோகமான்யதிலகர் ஆங்கிலத்தில் எழுதியுள்ள ஓரியானென்ற புத்தகத்திலிருந்து நன்குவிளங்குகிறது. மேலும் வராஹமிஹிரருக்கு முன்பு இரண்டுதடவைகள் வருஷப்பிறப்பை ருதுகாலங்களுக்கேற்ப மாற்றியிருக்கிறார்களென்றும் அதே புத்தகத்திலிருந்து தெரிகிறது. ருதுவாதி காலப்பிரிவுகள் ஸாயனக கணக்கைச் சேர்ந்தனவேயொழிய நிரயனத்தைச் சேர்ந்தனவல்ல. வருஷங்களுக் கேற்பட்டிருக்கிற 6 ருதுப்பிரிவுகளும் வராஹமிஹிரர்காலத்தில் தான் பிரத்தியக்ஷத்திற்குச் சரியாயிருந்திருக்கக் கூடுமேயொழிய இப்பொழுது சரியாயிருக்கமாட்டா. அயனாம்சம் சுமார் 23 பாகைகளாயிருப்பதால் அந்தருதுப்பிரிவுகள் இப்பொழுது 23 நாட்கள் தவறுதலாயிருக்கின்றன மார்ச்சுமீ 22உக்குச்சரியான பங்குனிமீ-7உ சுமாரில் வசந்தருது கிரமப்படி ஆரம்பிக்கிறபோதிலும் நமது பஞ்சாங்கங்கள் பிரகாரம் ஏப்ரல் 13க்குச் சரியான சித்திரை-மீ 1உ வரையில் வசந்தருது ஆரம்பிப்பதில்லை. ஆகவே பிரத்தியக்ஷமாயுள்ள ருதுக்களுக்கும் பஞ்சாங்கங்களில் சொல்லியிருக்கிற ருதுக்களுக்கும் தற்காலம் 23 நாட்கள் கதிவித்தியாசமிருக்கின்றது. இதை சுமார் பதினாயிரம் வருஷங்களுக்குக் கவனியாதுவிட்டுவிடுவோமானால் பஞ்சாங்கத்தில் உத்திராயண ஆரம்பம் என்றுசொல்லும்போது பிரத்

யக்ஷத்தில் தக்ஷிணாயன ஆரம்பமாயிருக்கும். ஆகவே இது விஷயத்தை இப்பொழுதே கவனிக்கவேண்டியது அவசியமென ஏற்படுகிறது. ஹிந்துக்களாகிய நாம் வைதிக லௌகிககாரியங்கள் செய்யுமுன்னர் சொல்லிக்கொள்ளும் சங்கல்பங்களிலிருந்து ஸாயனந் தான்கிராஹ்யமென்று ஏற்படுகிறது. நாம் சிராத்தாதி காரியங்கள் அனுஷ்டிக்கும் திதியை கவனிக்கும்போது அவைகள் நிரயனப்படி சரியே ஒழியஸாயனப்படி சரியல்லவென்று ஏற்படுகிறது. தவிர, ஆடிப்பூரம், பங்குனி உத்திரம் முதலான உத்ஸவாதிகள் மாதாரம்பவித்தியாஸங்களினாலே இப்பொழுது மாறுபட்டு வருகின்றன.

முடிவு:—வருகிற விபவ வருஷத்தைப் பங்குனிமீ 9ம் தேதியே ஆரம்பிக்கலாமா என்றும் சௌரமானமாதங்களை ஸாயனக் கணக்குப் பிரகாரம் ஏற்படுத்திக் கொள்ளலாமா என்றும் தர்ம சாஸ்திரத்திலும் ஜோதிட சாஸ்திரத்திலும் தேர்ந்தவர்களைக் கொண்டு பரிசீலனை செய்து தகுந்த ஏற்பாடுகளைச் செய்யவேண்டியது அவசியம். இது விஷயத்தில் எல்லா மடாதிபதிகளும் எல்லா ஹிந்து ராஜாக்களும் கவலை எடுத்துக்கொண்டால் காரியம் சீக்கிரம் முடிவு பெறும்.

விருத்தாஜலம். K. V. நாராயணஸாமி அய்யர்.

பி. ஏ. எல். டி.

---

## ஓர் ஸம்சயம்.

(1) காலஞ்சென்றஸித்தர்களின் ஸமாதியின் மேல் ஆலயங்கள் கட்டப்படுவதாகவும், அப்படிக்கட்டுவது தான் மஹிமைவாய்ந்தவையாகக்காணப்படுகிறது என்று சொல்வது. உண்மையா? அப்படியாயின் அங்ஙனம் கட்டப்பட்டக்ஷேத்ரங்கள் எவை? அப்படியேகட்டவேண்டுமெனப் பிரமாணமுண்டா? இவ்விதி எங்கேயுளது? விதி அப்படியாயின், அங்ஙனம் அமைக்கப்படாமல் சிலக்ஷேத்ரங்களிருக்கக் காரணமென்ன?

(2) ஆலயங்கள் கட்டிவெகுநாளான பிறகுதான் தக்ஷிணு மூர்த்தி அமைக்கப்பட்டு பூஜிக்கப்படுகிறதென்பது ஸரிதானு? அப்படியாயின் காரணமென்ன? இல்லையேல் ஆவாரணதேவதை களில் இம்மூர்த்தியும் ப்ரதிஷ்டைசெய்து பூஜிக்கவேண்டு மென விதியுளதா? அது எங்கே.?

இவைகளை தயைசெய்து ஆகமமறிந்த பெரியார் விளக்க வேண்டுகிறேன். ஆங்கில ஆராய்ச்சியில் விபரீதமாகக் கூறுவதால் உண்மையைப்ர்மாணத்துடன் அறிவித்து அவ்வக்ஞாநத்தை அகற்ற அருள்புரியும் படி ஆர்யதர்மநேய அறிஞர்களை அடிபணிந்து வேண்டுகிறேன்.

தீ. ராமனுத தீக்ஷிதர்.

# ஆன்ஹிக க்ரமம்,

ஆஹாரநியமம். அன்னமயகோசம், அல்லது, ஸ்தூலசரீரத்தையும் அதன்வழியாக, மற்றவைகளையும், ஸம்ரக்ஷிக்க, ஆஹாரம் அத்யவசியமாகும். பௌதிக உலகத்தில், பற்றுகொண்டவர், அன்னகோசத்தை, மாத்திரம் வளர்க்க, வேண்டியஉணவைத் தேடிக்கொண்டனர். அத்யாத்மவிஷயத்தில், அதிகம் ஈடுபட்ட, பாரததேசம் ஆத்ம உலகம் ஜடஉலக மிரண்டிற்கு மேற்றஉணவை, பலநியமங்களுடன் ஏற்படுத்தியிருக்கிறது. அதன் உண்மை நிலையை அறியாதார்தான், உணவிலுமா நிர்ப்பந்தம்? என ஏளனம் செய்வர். ஒவ்வொருநிமிஷத்தையும் வீணுக்காமல் பரமாத்மயாத்ரைக்குஸஹாயம் செய்யவே, இந்தநிர்ப்பந்தமமைக்கப்பட்டதெனும் ப்ரஸவநோயை, ஜடப்பற்றுள்ள மலடி எங்ஙனமறிய முடியும்?

வயிற்றை நிறப்புவதுமாத்ரம், இதன் நோக்கமல்ல" ப்ராணு பாநங்களுடன் கூடிநால்வகை அன்னத்தையும் பாகம் செய்கிறேன்" என்று கீதையில் கூறியபரமாத்மா, நம்முன்னே வஸிக்கிறுறன்ருே? அவரை உத்தேசித்துச் செய்யப்படும் ஓர் அக்னிஹோத்ரமாம் ஆஹாரம் எனப்படுவது பஞ்சப்ராணன்களுக்கும்(ப்ராண அபாந, வ்யாந, உதாந, ஸமாந.) ப்ரும் மத்திற்கும் ஸ்வாஹாகார

த்துடன், முதலில் ஹோமம் செய்யப்படுகிறது. மற்றஹோமங்களுக்கு, எப்படி ஸ்தலசுத்தி, கர்த்ருசுத்தி, ஹோமதரவ்ய சுத்தி, அக்னிசுத்தி, இவைகள் ஸ்தாலீபாகம். ஔபாஸநம் அக்கினிஹோதாங்களில் செய்யப்படுகின்றனவோ, அங்ஙனம். இதற்கும், பலநியமங்கள், வேண்டியதவசியமன்றோ? ப்ரதிதிநம் இரண்டுவேளைகளிலேயே ஔபாஸந அக்னிஹோத்ரங்கள் செய்வதுபோல் இப்பிராணாக்நிஹோத்ரமும் இரண்டேவேளை செய்யத்தக்கதென வேததர்மசாஸ்திர புராணாதிநூல்களும் சிஷ்டாசாரமும் நமக்குஉபதேசிக்கின்றன. போஜநத்திற்குப் போகும்போது சுத்தமாககாமக்ரோதாதிகளைவிட்டுவிட்டுககாலலம்பி ஆசமனம்செய்துவிட்டு, சாந்தமான மனதுடன் உட்காரவேண்டும். பாயின்மீது உட்கார்ந்தோ, காலுக்கும் தலைக்கும் வற்றதையணிந்தோ காலமேல், கால் போட்டுக்கொண்டோ, பார்யைபோடு பேசிக்கொண்டோ நாய் சூத்ரன். பதிதன் முதலியவர்களால் பார்க்கப்பட்டோ புஜிக்கலாகாது.

ஹவிஸ்ஸை உரியபாத்திரத்தில் பரமாரி, உப்புப்பட்டது ஹோமஅநர்ஹமாதலால், கரிகாய்களை அன்னத்தின் மேல்படாமல், வைத்து. அக்கினிஹோத்ரகாலத்தில் எது எது காணப்படுகிறதோ அதைத்தவிற, மற்றதைப் புஜிக்கலாகாது, ஆதலால் எல்லாவற்றிலும் கொஞ்சம் கொஞ்சமாகவைத்து, காயத்ரியால் ப்ரோக்ஷித்துப்பரிஷேசநம் செய்யவேண்டும். அக்நிஹோத்ரத்தில் பரிஷேசநம் செய்வதுபோல் அபிகாரத்திற்குப் பிறகு காலை மாலைகளுக்கேற்ற மந்திரத்தால் பரிஷேசநம் செய்யவேண்டும். பரிதஹ, நாலுபுறத்திலும், ஸேசநம் ஜலத்தைவிட்டு நினைப்பது, என்று இதன் பொருள். ஹவிஸ்ஸுக்கும், அக்னிக்கும் இது ஓர்ரக்ஷையாகும். ஜலத்தைவிட்டுச்சுற்றிலும் ஈரமாக்கினால், எறும்பு முதலியவை அன்னத்தினருகே அணுகாதெனும் நோக்கத்தைக்கொண்டு இங்ஙனம்முனிவர்கள் ஏற்பாடுசெய்திருப்பார்களென்றால் தற்காலகாரணவாதிகளில் சிலரிதை ஆமோதிப்பர். இடது கையால் இலையைப்பிடித்துக்கொண்டே வலதுகையில் பிறரால் போடப்படும் ஜலத்தை உரிய மந்திரத்தைக்கூறி, உட்கொள்ளவேண்டும். இதே ஆபோசநமெனப்படும். பந்தியில் உட்கார்ந்திருந்தால் எல்லோரும் ஏககாலத்தில் உட்கொண்டு ப்ராணாஹுதி செய்யவேண்டும். அப்

படிச்செய்வதால் ஒருவர்புசித்த சேஷத்தை, மற்றொருவர் ஹோமம் செய்யும் குற்றத்தை அகற்றலாம். இக்கருத்தைக்கொண்டேதான், ஒருவர் புசித்த சேஷத்தைப்புசிக்கக்கூடாதெனவும் விதி பிறந்தது. ஆஹுதிக்குக்கூறிய அளவு அன்னத்தை எடுத்து நகமும் பல்லும் படாமல், ஒரு ஆஹுதியை விழுங்கிய பிறகு மற்றோராஹுதியாக விழுங்கவேண்டும். பிறகு இடது கையை இலையின் இடதுபுறத்தில் பூமியில்விட்ட ஜலத்தால் நனைத்து, மார்பில் தொடவேண்டும். எனது ஆன்மா பரப்ரும்மத்தினிடம் மோக்ஷஸாம்ராஜ்யத்தைப்பெற, சேரவேண்டுமென, ப்ரார்த்திக்கப்படுகிறது. இதை கவனித்தவர், பசியெனும் பகைவனைவெல்லும், பரிஹாரத்திலும், மோக்ஷஸாம்ராஜ்யத்தைப்பெற ஸஹாயம் தேடிவைத்த, ஆர்யமதத்தைப் போற்றாமலிருக்கமுடியாது. இவ்வக்னிஹோத்திரத்திற்கு உத்திராங்கம் ஒன்றுண்டு, அது முடிவதற்குள் வயிற்றை, வேண்டியஅளவுநிறப் பிக்கொள்ளவேண்டும், பின்னர் ஓர் மந்திரத்தால் உத்திராபோசனம்செய்து இக்கர்மாவைப்பூர்த்திசெய்கிறோம். முதல் ஆபோசனத்தில், பின்னால் வரும்ஹவிஸ்ஸிற்கு, ஓ அமிருத? நீ முன்னே சென்று இடத்தைசுத்தம் செய்யும், உபஸ்தானமாயிரு என்றும் முடிவில், நீமூடியாயிரு, என்றும் பிரார்த்திக்கிறோம். ஆஹுதி செய்யும்போது ஹோமம்செய்தபொருளை ஸரியாகப்பாகம் ஆகும்படிபார்க்கவேண்டும். இல்லையேல் குல்மரோகம் வரும் எனக்கூறினோம். வாயுவிலிருந்து அக்னி, அக்னியிலிருந்து ஜலம், என ஸ்ருஷ்டிக்ரமப்படி பஞ்சப்ராணன்களில் ஹோமம்செய்வதும். அதைக்காக்க அமிருதமென்னும் ஜலத்தையழைப்பதும் மிகப்பொருத்துமுள்ளதன்றோ?

पूजा ते विषयोपभोगरचना வஷிஜாதெ விஷயொவலொமரவநா

விஷயங்களை அநுபவித்தலே உனக்குச்செய்யும் பூசைஎனறசங்கரபகவத்பாதாள் கூரியபடி, உணவும் ஓர் பூஜையானதால் உபவாஸதிநங்களில், இப்பூஜை நடைபெறவேண்டுமென சிலமுனிவர், ஜலத்தைப்ராணாக்னிஹோத்ர மந்திரங்களால் ஜபித்து உட்கொள்ளும்படிசொல்கின்றனர். பலாஹார, திநங்களில், உப்புக்கலந்த பொருளை ஆஹுதிசெய்யக்கூடாதென்ற விதிக்குள்பட்டு, கேவல மந்திரபடநம் செய்வது சிஷ்டாசாரமாகும். இரண்டேவேளைதான் போஜநம் எனச்ருதிவிதிப்பதால், மத்யாக்ஹநதில் அக்னிஹோத்ரமில்லாததுபோல், இடைவேளைபோஜநம் கண்டிப்பாகக்கூடா

தென, தடுக்கப்படுகிறது. இது கேவலதர்மசாஸ்திரக் கொள்கை யான பரலோகத்தைப், புண்ணியத்தைப்பற்றியது மாத்திரமல்ல. சரீர ஆரோக்யத்திற்கு, மிகமுக்யமான தெனப்பலவைத்ய ஆரா ய்ச்சிக்காரர்கள் கூறுவதோடு பலாநுபவத்தில் வைத்துக்கொண்டு ஆரோக்யத்தையும் பெற்றுவருகின்றனர். அன்றியும் ஓர் மாதம், தேவர்களுக்கு, ஓர் நாளாதலால், ஓர் நாளின் காலை மாலைகளான அமை பூர்ணிமைகளுக்கிடையில் அதாவது ஏகாதசியன்று எட்டு வயதிற்கு மேற்பட்டவரும் எண்பது வயதிற்கு மேற்படாதவரும் சுத்தோபவாசம் இருக்கவேண்டுமென்றும் தர்மநூல் கட்டாயப் படுத்துகிறது. உத்யோகம் செய்வோர் வாரத்திற்கோர் நாள் விராமமெடுத்துக் கொள்வதுபோல் உடலினுள்ளேயுள்ள ஜீரணக் கருவி ஓயாது வேலை செய்து பக்ஷத்திற்கு ஒரு நாளாகிலும் ஓய் வு எடுத்துக் கொள்ளல் அவச்யமன்றோ? ஸகல வியாதிகளுக்கும் அஜீரணமே ஆதிகாரணமென்றும் அதை அகற்றவல்லது உபவாஸ மெனும் உத்தம ஔஷதமென்றும் சிகித்ஸகர் சொல்வர். உடன் பிறந்த பகைவன் பசியாம். அவனை வெல்ல உபவாஸமே வஜ்ரா யுதமென வேதமோதுகிறது. பகல் சூரிய வெளிச்சம்போல் விளங்குமிதை விளக்க வைத்யர் வாக்கெனும் கைத்தீபம் வேண்டு மோ? உட்பொருளை உணர்ந்தோ உணராமலோ சிஷ்டாசாரம் தேசாசாரமென அதைக் கைப்பற்றிய நம்மவர் தீர்க்காயுஸுள்ள வர்களாகவும் த்ருடகாத்ரர்களாகவும் வாழ்ந்திருந்தனர். நிமிஷத் திற்கோர்முறை தினுஸுதினுஸான ஆஹாரம் கொண்டு மனம் போனபடியெல்லாம் வேஷத்தை மாற்றும் தற்கால நவநாகரீக ப்ரும்மாக்களும் ப்ரஜைகளும் அதேபோல் புதிதுபுதிதான நோய் வாய்பட்டு அல்பாயுளாக இறப்பதையுங் கண்கூடாகக் காண்கி றோம். இக்கருத்தையே திராவிட அர்த்த சாஸ்திரமெனத்தகும். நூலில் சிறுபாவில் அழகாக ஆசிரியர் கூறுகிறார். "மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியதற்றதுபோற்றி உணின்" என. ஆதலால் பூஜையோ ஹோமமோ அகாலத்தில் ஆகாதது போல் ஆஹாரமும் இரண்டு வேளைக்குமேல் கூடாது.

பூஜிக்கும் ஸ்தலம் மிகசுத்தமாயிருத்தல்வேண்டும். ஏகாந்த மாயிருக்கவேண்டும். ஆவரணமில்லாமல் வெளிப்ரதேசத்தில் பூஜிக் கக்கூடாது. காக்கைமுதலிய பக்ஷிகளும் நாய்முதலிய மிருகங் களும் கண்ணில்படாத இடமாயிருக்கவேண்டும். வடக்குத் தவிர

மற்றதிங்முகமாக உட்காரலாம். இலே போடுமிடத்தை, உட்காரப் போவதற்கு சற்றுமுன் சாணமிட்டு அல்லதுஜலத்தைத் தளித்து கையால் சுத்தம்செய்யவேண்டும். கீழே உள்ள, துஷ்கிருமிகளே யும் சத்தைகுப்பையுமே. பூதமென்றும் ராக்ஷஸரென்றும், கூறு பவர் கூறட்டும்' முடிவில் சாஸ்திரம் ஸௌகர்யமென்றநுஷ்டித்தல் அவசியமாகும். ஐச்வர்யமிருந்தால், ஸ்வர்ணம், வெள்ளி எண்பது பலத்திற்குக் குறையாத வெங்கலம், முதலியவைகளால் போஜந பாத்ரம் செய்துகொள்வது சாஸ்திரமுறைமைக்கு ஒற்றதேயாகும் தம்பதிகளே அதில் புஜிக்கலாம். அப்பாத்திரத்தை வேறெக்காரி யத்திற்கும் பெரியார் உபயோகிக்க ஸம்மதிக்கமாட்டார். அதற்க டுத்தபடியாக, இலே உபயோகிக்கத் தக்கது. அதில் பல்வேறுரிஷி கள் பல்வேறு இலைகளைப்போற்றியும் தூற்றியும் கூறுகின்றனர். பொதுவாக, எந்த இலையையும் முதுகுப்பக்கம் உபயோகிக்கக் கூடாது சில இலைகள் உஷ்ணம் தாளாமல் பாகமாகி உணவுடன் தனது குணத்தையும் (கோராமலே) கலந்துவிடும். இதில் எது வைத்யமுறையையொட்டி உடலுக்கநுகூலமானதோ அதைக் கொள்ளும்படியும், மற்றதைத் தள்ளும்படியும் விதிநிஷேதம் வகுக்கப்பட்டதெனலாம். வாழைப்பட்டையின் முதுகுபாகமும் தாமரையின் முதுகும் பெரியார் உபயோகிக்கப்படாதது. ஈர வஸ்த்ரம் ஒரே வஸ்த்ரம பெஞ்ச், டேபிள் முதலியவிடம் எச்சில், மயிருள்ளது. சொககாய்,தலேகுட்டை,பெண்பங்க்தி,ஸ்திரீசேஷம் ரஜஸ்வலாசேஷம், தீட்டுக்காரர் வீட்டு அன்னம், சூத்ரனுக்காகப் பிராமணன் செய்யும் ஸந்தர்ப்பணே, ஆரின அன்னம், ஒரு யாமம் கழிந்த அன்னம், சூத்ரசேஷம் முதலியவை, போஜநத்தில் விலக் கத்தக்கவைகளாகும். ஒரே பங்க்தியில் பலர் புசிக்க, ஒருவர் எழுந்துவிட்டால் மீதியுள்ளோர் உணவு, உச்சிஷ்டமாய்விடும். பலர் உட்கார்ந்து புசிக்கும்போது, யாராவது ஒருவன் பாபியாயி ருந்தால் அவனுடன் உட்காருபவருக்கு அந்த பாபம் வருமாதலா லும், சிலருடைய திருஷ்டி, க்ரூரமாயிருப்பதாலும், அதன்மூலம் பல இன்னல்கள் நேருமாதலாலும், பெரும் ஸமூஹத்தில், உட் கார்ந்து புஜிப்பது தடுக்கப்பட்டிருக்கிறது. பாங்தேயர், அதாவது ஸமபங்க்தியில் உட்கார்ந்து புசிக்கத்தக்க பிராமண யோக்கியதை ஆசாராநுஷ்டானம் நிறைந்தவர், கூடிய பந்தியானல் அவச்யமா யுமிருந்தால், த்ரிஸுபர்ணம், என்ற மந்திரபாடங்களே, ஜபித்துப்

புசிக்கலாம். அதிலும் அபாங்க்தேயன், அருகில் வந்துவிட்டால், ஆபத்பக்ஷமாக ஜலம், பஸ்ம, வாசற்படி, தூண், அக்னி, இவைகளால் பங்திபேதம் செய்துகொள்ளலாம். ப்ரபலதர்மசாஸ்திரக்காரரும் க்ருஹ்ய ஸூத்திரக்காரருமான, ஆபஸ்தம்பர் என்ற பெரியாரைச் சோதிக்க, தர்மதேவதையே இவரெதிரில் கோவதம் செய்து இவர் வீட்டிலேயே அதிதியாகவும் வந்துவிட்டாராம். என் செய்வர்? பங்தியில் அக்கோஹத்திக்காரர் உட்கார அப்பங்தியை பேதிக்க, ஜலத்தை அருகில் விட்டாராம். அது ஸ்தம்பம்போல் நின்று பங்தியை மறைத்ததாம். ஆதலால் ஆபஸ்தம்பரென்னும் காரணப்பெயர் பெற்றார் என கர்ணகர்ணிகையாகப் பரவும் ஓர் கதையுண்டு.

பலர் திருஷ்டி தோஷம் வடநாட்டிலில்லை, என்று கூறி இன்னாட்டிலுமதைக் கைகொள்வதோடு, பிறரையும் தூண்டுகின்றனர். ரஜஸ்வலை, சண்டாளன, பதிதன்' நாய் முதலியவர்கள் பார்த்த அன்னத்தைப் புஜிக்கலாகாது, புஜித்தால் அதை வாந்தி செய்து மூன்றுநாள், உபவாஸமிருக்கவேண்டுமென்றும் ஸந்தியா காலங்களிலும், பாதி இரவிலும் புஜிக்கக் கூடாதென்றும் தர்ம நூல் ஒரே மூச்சில் இவைகளை' நிஷேதிக்கிறது. ஆசாரவிஷயத்தில் தேசாசாரமும் சிஷ்டாசாரத்தைப்போல் ப்ரமாணமேயாகும். ஆதலால் நமது, தக்ஷிணதேச ஆசாரம், நமக்குக் கைப்பற்றத்தக்கதாகும். அத்வைத த்வைத, விசிஷ்டாத்வைதமென்ற மிகப் பெரிய மும்மதாசாரியார்களும், அவதரித்தது நமது தக்ஷிண தேசத்திலேயாகும். ஆதலால் இஹபரஸாதகமான, ஸகல ஆசாரங்களையும் கைப்பற்றி, வீண்வாதம் புரியாது, மஹரிஷிகளை, மதித்து தேஹாரோக்யம், நீண்ட ஆயுள், பிரும்மவர்ச்சஸ், முதலியவைகளைப் பெறுவது நமது கடமையாகும்.

(தொடரும்)

ஸ்ரீவத்ஸ வே. ஸோமதேவசர்மா.